
விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

அம்பாள் ரவல்ஸ்



கிலோமீற்றருக்கு 18ரூபா
- பலாலி விமான நிலையத்திற்கு 1200/-
- அரச. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விசேடசலுகைக் கட்டணம்.
- A/C, Non A/C வாகனத்துக்கு

அம்பாள ரவல்ஸ்
கம்பஸ்லேன் (மக்கள் வங்கிக்கு அருகில்)
திருநெல்வேலி
T.P. 2222742, 0777-518319

வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 02 திங்கட்கிழமை (18.11.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 334

## ஒஸ்லோ மாநாட்டை அடுத்து
# புலிகளின் தடையை அமெ - பிரி. நீக்கும்!
## இந்திய அரச ஊடகங்கள் தகவல்

(புதுடில்லி)

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை அமெரிக்காவும், பிரித்தானியாவும் நீக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக இந்திய அரச தரப்பு செய்தி ஊடகமொன்று நம்பகமான தகவலை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.**

விடுதலைப்புலிகள் சமாதானத்தின் மீதும் மனித உரிமைகளை மதிக்கும் நடவடிக்கைகள் மீதும்காட்டி வரும் அக்கறை, மற்றும் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து சமாதனத்தை அடைவதற்காக பாடுபடுகின்ற தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் புலிகள் மீதான தடையை தமது நாடுகளில் நீக்குவது குறித்து அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஆராய்ந்து வருவதாகவும் தெரிகிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்டுள்ள புலிகள் இறுதித்தீர்வை நோக்கி நகர்வதாகவும் எதிர்வரும் 25ந் திகதி ஒஸ்லோவில் நடை

(08ம் பக்கம் பார்க்க)

## சிங்கள - முஸ்லிம் குழுக்கள் புத்தளம் முந்தலில் மோதல்
### பத்துக் கடைகளுக்கு தீவைப்பு

(புத்தளம்)

புத்தளத்தில் உள்ள முந்தல் பகுதியில் நேற்று முஸ்லிம் சிங்கள இனங்களுக்கடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலில் பத்துக் கடைகள் எரித்து நாச மாக்கப்பட்டதுடன் மூன்று ஓட்டோக்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தில் மூன்று பொது மக்கள் படுகாயங்களுக் குள்ளாகி புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இம் மோதல் சம்பவத்தை அடுத்து புத்தளம் நகரப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையை சமாளிக்க விசேட பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தை அடுத்து கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி வந்த பஸ்வண்டிகள் கல்வரத்தில் சம்பந்தப்பட்ட குழுக்களினால் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. (ம)

### இலங்கைக்கு உதவும்
## ஒஸ்லோ மாநாட்டில் இந்தியா பங்குபற்றும்

(புதுடில்லி)

ஒஸ்லோவில் இம்மாதம் 25ம் திகதி நடைபெறவிருக்கும் இலங்கைக்கான மனிதநேய உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கூட்டத்தில் இந்தியாவும் கலந்து கொள்ளவுள்ளது.

இந்தியாவிலிருந்து பங்கு கொள்ளும் குழுவிற்கு தற்போது நோர்வேயில் இந்திய உயர்ஸ்தானிகராகப் பதவி வகித்துவரும் கோபால கிருஸ்ணகாந்தி தலைமை தாங்கவுள்ளார்.

(08ம் பக்கம் பார்க்க))

# அதாவுல்ல - தொண்டமான் ஆதரவு
# ஆட்சியை மாற்ற ஜனாதிபதி தீவிரம்!

## புலிகளுடன் தொடர்ந்து பேசவும் திட்டம்

(நமது நிருபர்)

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் தோன்றியுள்ள தலைமைத்துவப் போட்டியையும், ஐ.தே.முன்னணி அரசின் தளம்பல் நிலையையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை தீவிரமாக முன்னெடுக்கும் திட்டத்துடன் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் ஜனாதிபதி சந்திரிகா தீவிர கவனம் செலுத்தி வருவதாகக் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் எழுந்துள்ள உட்பூசல்க

லாம் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

செய்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பாதகமான முறையில்

(08ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் ஈ.பி.டி.பி இருப்பது மக்களுக்கு அச்சுறுத்தல்
### பொது அமைப்புக்களின் ஒன்றியம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதிக்குள் ஈ.பி.டி.பி அமைப்பினர் நுழைந்திருக்கின்றமை, அங்குள்ள மக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளது என்று சுட்டிக்காட்டி, யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ் அலுவலகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது கடற்படையினரின் ஆதரவுடன் நெடுந்தீவில் ஈ.பி.டி.பி அமைப்பினர் தரையிறங்கியிருப்பதினால் அவர்களை அங்கிருந்து வெயியேறுமாறு கோரி பொது மக்கள் போராட்த்தில் ஈடுபட்டுள்ளனர்.

(08ம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் எழுந்துள்ள உட்பூசல்களினால் கிழக்கு முஸ்லிம்களுக்கான தலைமைத்துவத்தை அமைச்சர் அதாவுல்லாவும், வடக்கு முஸ்லிம்களுக்கான தலைமைத்துவத்தை வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூரும், வடக்கு கிழக்கிற்கு வெளியிலான தலைமைத்துவத்தை ரவூப் ஹக்கீமும் பங்கு போட்டுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள போட்டி நிலமைகளும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முஸ்லிம் மக்களின் உரிமைகள் தொடர்பாக வழங்கியுள்ள வாக்குறுதியின் ஸ்திரமற்ற தன்மையும், முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு கிடைக்காது போகலாம் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை உறுதி செய்யும் வகையில் கிழக்கு முஸ்லிம் மக்களின் தலைமைத்துவ உரிமைக்காக போராடும் அணியினர் மறைமுகமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் மூலமாக அடிக்கடி தொடர்பு கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள்.பிளவு பட்டு செயற்படும் போது பிரதமர் ரணில் தலைமையிலான அரசின் பெரும்பான்மைப்பலத்தில் தளர்வு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

அரசும் விடுதலைப்புலிகளும் ...கைக்கு பாதகமான முறையில்

(08ம் பக்கம் பார்க்க)

...யம் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ் அலுவலகத்திற்கு கடி...

...மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(08ம் பக்கம் பார்க்க)

# நெடுந்தீவுக்குச் சென்ற ஈ.பி.டி.பி ஜெற்றியில் தரிப்பு!

## வெளியேறக்கோரி மக்கள் போராட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்குச் சென்றுள்ள ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினர்கள் நெடுந்தீவு ஜெற்றிப்பகுதியில் தங்கி இருப்பதாக அங்கிருந்து நேற்று நள்ளிரவு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈ.பி.டி.பி அமைப்பினருக்கு எதிராக திரண்டுள்ள மக்கள் அவர்களை வெளியேறுமாறு கோரி தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜெற்றிப்பகுதியில் தங்கியிருக்கும் ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து விரட்டும் வகையில் மக்களும் ஜெற்றிக்கு அருகில் நின்றவாறு போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும், நேற்று இரவும் கொட்டிய மழையிலும் நனைந்தவாறு மக்கள் எதிர்ப்புப் போராட்ட

(08ம் பக்கம் பார்க்க)

## மன்னார் - வவுனியாவுக்கான பாதுகாப்பு உப குழுக் கூட்டம் இன்று ஓமந்தையில்

(வவுனியா)

மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக மாவட்ட உப குழுவின் கலந்துரையாடல் ஒன்று இன்று காலை ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ள இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் வவுனியா, மன்னார் மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் தலைமையில் வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், மன்னார் அரசியல் துறைப்

(08ம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு ஒப்பந்தை அமுல்படுத்தக் கோரி

# மாபெரும் மக்கள் போராட்டத்திற்கு சர்வதேச மாணவர் பேரவை ஏற்பாடு

(திருநெல்வேலி)

சமாதானத்தை வலியுறுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமை அமுல்படுத்துமாறு கோரி குடாநாட்டைச் ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாடு செய்து வருகிறது.

24 மணி நேரம் யாழ் குடாநாட்டின் அனைத்துச் செயற்பாடுகளையும் முற்றாகச் ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் இம் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம் உட்பட யாழ் குடாநாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் போரட்டத்ததை பரவச் செய்யும் வகையில் ஏற்பாடுகள இடம்பெறுகின்றன.

அரச தனியார் நிறுவன செயற்பாடுகளை முற்றாக நிறுத்தி, போக்குவரத்துக்களை முடக்கும் வகையில் போராட்டம் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 பாதையை 24 மணிநேரமும்

(08ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வாஜ்பாயின் கோரிக்கை மீது கோத்ராயாத்திரைக்குஏற்பாடு

## அமைதியை நிலைநாட்ட பொலிஸார்தயார்

(புதுடில்லி)

இந்திய பிரதமர் அடல் விஹாரி வாஜ்பாய் நேரடியாகக் கேட்டுக்கொண்டதையும் மீறி 'கோத்ரா' யாத்திரையை திட்டமிட்டபடி நடத்துவதற்கு விசுவ இந்து பரிசத் தொண்டர்கள் ஆயத்தங்களை செய்துகொண்டிலிப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் அதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசுவ இந்துப் பரிசத்தின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கோத்ராவில் யாத்திரை நடத்துவதற்கா நேற்று பெருந்திரளான விஸ்வஹிந்துப் பரிசத்தின் தொண்டர்கள் அகமதாபாத்திலுள்ள ஆலயம் ஒன்றினுள் திரண்டிருந்தனர்.

யாத்திரையின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக் கவிரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் கோத்ராவில் பயணித்த ரயில் பெட்டி ஒன்று தீயிடப்பட்ட சம்பவத்தை நினைவு கூறும் வகையிலேயே விஸ்வஹிந்துப் பரிசத்தின் தொண்டர்கள் இந்த யாத்திரையினை மேற்கொள்ளவிருந்தனர். இந்த யாத்திரையின்போது தீயிட்டு எரிக்கப்பட்ட ரயில் பெட்டி ஒன்றை ஊர்வலமாக கொண்டு செல்லப்போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கோத்ரா யாத்திரை குறித்து நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் விஸ்வஹிந்துப் பரிசத்தின் தலைவர்கள் பேச்சுக்கள் நடத்திய வேளை பிரதமர் வாஜ்பாய் கோத்ரா யாத்திரையினை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அவ்வாறு நடத்தினால் மீண்டும் கலவரம் ஒன்று தோன்றக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுவிடும் எனத் தெரிவித்திருந்தார்.

எனினும் அவரது வேண்டுகோளையும் மீறி விஸ்வ ஹிந்து பரிசத்தின் தொண்டர்கள் யாத்திரைக்கான முழு ஏற்பாடுகளையும் செய்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

மேலும் இதேவேளை விஸ்வ ஹிந்துப் பரிசத்தின் பொதுச் செயலரின் மனைவியும் மாளும் உட்பட சில பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்றும் யாத்திரைக்கான ஒலி பெருக்கியின் ஒலியை பொலிஸார் நிறுத்திய போது தொண்டர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கலவரம் ஏற்பட்டதாகவும் பிந்தி கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (பி-02)

உலக தரிசனம்

# 6 உறுப்பினர்களையும் பிணையில் விடக்கோரி இன்று மனுத்தாக்கல்

(கொழும்பு)

திருகோணமலை கடற்பரப்பில் வைத்து இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் 6 உறுப்பினர்களையும்பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று மனுவொன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

இம்மாதம் 2ம் திகதி அதிகாலை சம்பூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் படகில் 35 கிளைமோர் குண்டுகள் மற்றும் தொலைத்தொடர்பு குண்டுகள் ஆகியன ஏற்றிக்கொண்டு சென்றதாக குற்றம் சாட்டப்பட்டே இவ் ஆறுபேரையும் இராணுவத்தினர் கைது செய்தனர்.

இவர்களை திருகோணமலை நீதிவான் எஸ் தயாசேந்திரன் விளக்க மறியலில் வைக்கும் படியும் உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-08)

# சமாதானத்தை குழப்ப சந்திரிகா - கதிர்காமர் சதி

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெள்ளிக்கிழமையன்று சரத்அமுனுகம தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன மறுத்துள்ளார். கபடமான அரசியல் நடவடிக்கைகள் மூலமும், பொறாமை காரணமாகவும் ஜனாதிபதி குமாரதுங்கவும், லக்ஸ்மன் கதிர்காமரும் சமாதானநடைமுறைகளை சூழ்ச்சிகள் மூலம் குழப்ப முயல்கின்றனர். பேச்சுக்களுக்கான கொள்கை வரையறைகளை கடந்த 11மாதங்களாக ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை என்பது பச்சைப் பொய்யாகும்.

இப்பொழுது அமைச்சர் மிலிந்தமொறகொட, சிரமமான முறையில் சந்தித்து ஜனாதிபதிக்கு விளக்கி வருகிறார். பொ. ஐ. முன்னணி குற்றச்சாட்டுக்களை வெளியிட்ட தினத்தன்று மிலிந்த மொறகொட குமாரதுங்கவை இறுதியாகச்சந்தித்திருந்தார். ஒரு தேர்தல் மூலமாகவல்லாமல் பத்து வருடங்களுக்கு இடைக்கால நிர்வாகததை புலிகளிடம் கையளிப்பதற்கு குமாரதுங்கவும், கதிர்காமரும் உடன்பட்டிருந்ததை 'ரைம்' சஞ்சிகை வெளியிட்டிருந்தது.

இது பற்றி அன்றையஎதிர்க்கட்சித் தலைவருக்கு அவர்கள் அறிவித்திருக்கவில்லை. அவர்கள் முன் வைத்ததை அன்று புலிகள் ஏற்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? பொ. ஐ. முன்னணியினர் தனிநாட்டிற்கு வழிகோலியவர்களாகியிருக்க மாட்டார்களா?

ஜனாதிபதி குமாரதுங்கா வே.பிரபாகரனுக்கு எழுதிய 42 கடிதங்களில் பல இதுவரையும் வெளியிடப்படவில்லை. இன்று பிரதமரும் அமைச்சர் ஜீ எல் பீரிஸும் சமாதான நடவடிக்கைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தினால் ஜனாதிபதியும் கதிர்காமரும் பொறாமையடைந்துள்ளனர். என்பதே உண்மை. கதிர்காமர் ஆத்திரமூட்டும் அறிக்கைகளை வெளியிடுவதற்குக் காரணம் அவருக்குப் பிரதமர் வழங்கியுள்ள மிதமிஞ்சிய பாதுகாப்பும் ஆடம்பர வாகனங்களுமாகும். அவ்வாறானவாகனங்கள் அமைச்சர்களுக்கே வழங்கப்பட்டிருக்கவில்லை. அரசியற் சட்டப்படி கருத்து கணிப்பு நடத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அரசாங்கத்தின் மீது அதிருப்தியிருக்குமானால் அவர்கள் கருத்துக் கணிப்பொன்றை நடத்தலாம் இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந)

காவிரிப் பிரச்சினை தொடர்பாக

# பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தை உடனடியாக மீளப்பெற வேண்டும்

## உச்ச நீதிமன்றம் ஜெயலலிதாவுக்கு உத்தரவு

(புதுடில்லி)

காவிரிப் பிரச்சினை குறித்து தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தை உடனடியாக மீளப்பெற வேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கர்நாடக முதலமைச்சரின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரித்துவந்த உச்ச நீதிமன்றமே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

காவிரி நதி நீர் ஆணையத்தின் மீது தமிழக அரசிற்கு நம்பிக்கையில்லையென குறிப்பிடப்பட்டிருந்த கடிதத்தை பிரதமருக்குத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அனுப்பி வைத்திருந்தார்.

இந்தக் கடிதம் குறித்து ஆட்சேபம் தெரிவித்த உச்ச நீதிமன்றம் இக்கடிதத்தை உடன் மீளப் பெற வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம் கிருஸ்ணாவை முன்னர் காவிரிப் பிரச்சினை தொடர்பாக கடுமையாகக் கண்டித்திருந்த உச்ச நீதிமன்றம் தற்போது தமிழக முதலமைச்சர் ஜெலலிதாவைப் பற்றி அதிருப்தியான கருத்துக்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி.02)

# குற்றச்சாட்டு ஆதாரமற்றது ஈராக் நிரூபிக்குமாம்

(பக்தாத்)

பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை தமது நாடு வைத்துள்ளது என்ற குற்றச்சாட்டை ஐக்கிய நாடுகள் ஆயுத சோதனையாளர்கள் கைவிட வேண்டும் என ஈராக் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளில் ஆயுத பரிசோதனையாளர்களை ஈராக் வரவேற்பதாகவும், ஆயுத சோதனைகளின் பின்னர், அமெரிக்காவின் குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவையென்பது நிரூபிக்கப்படும் என்றும் அந்நாட்டின் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் ஆயுத சோதனையாளர்கள் ஈராக்கினுள் முறையான ஆயுத சோதனைகளை நடத்தவுள்ளதாகவும், மேற்குலக நாடுகளின் உளவாளிகளை அனுமதிக்கப் போவதில்லையென்றும் ஐ. நா. வின் ஆயுத சோதனைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். (பி- 4)

# வாஜ்பாய் பாக். செல்வாரா? முடிவு செய்யப்படவில்லை

(புதுடில்லி)

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதுபற்றி இதுவரை தாம் எந்த முடிவும் எடுக்கவில்லையென இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் எப்பொழுதும் தமக்கிடையேயான பிரச்சினைகளைத்தூண்டும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டுவருவதே இந்தியாவின் கவலை என்று புதுடில்லி செய்தியாளரிடம் தெரிவித்த வாஜ்பாய் தாம் இன்னும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டில் கலந்வகொள்வது பற்றி எந்த முடிவும் எடுக்கப்திடவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே அரசியல் சம்பந்தமான மனஸ்தாபங்கள் கடந்த சில காலங்களாக இருந்து வருவது தெரிந்த விடயமே. (பி-02)

# மதமாற்றத் தடைச் சட்டம் விரைவில் பாராளுமன்றில்

(கொழும்பு)

இந்து சமயத்தவர்களை கட்டாயத்தின்பேரில் மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகளை தடைசெய்யும்வகையில் சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இச்சட்டமூலத்தில் மதமாற்றத்துக்கு ஆதரவாக பிரசாரம் செய்வோருக்கு தண்டனை வழங்கவும் இதில் இடமளிக்கப்படுகிறது.

இச்சட்டமூலம் அனேகமாக ஐக்கிய தேசிய முன்னணியின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டவிவாதங்களின் பின்னர் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (உ- 8)

# பல் வைத்தியர்களுக்கான 61 வெற்றிடங்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணம கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 61 பற் சிகிச்சை வைத்தியர்களிற்கு வெற்றிடங்கள் உள்ளதாக சுகாதார அமைச்சர் பி.தயாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இப்பிரதேசங்களில் கடமையாற்றுவதற்கென பல் வைத்தியர்கள் முன் வராதமையாலேயே இவ் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

தற்போது தோன்றியுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து இப்பிரதேசங்களில் உள்ள அரசாங்க வைத்திய சாலைகளுக்கு வைத்தியர்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அமைச்சர் தெரித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் அரசாங்க வைத்தியசாலைகளில் சுமார் 465 பற்சிகிச்சை வைத்தியர்கள் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (க-08)

# பயன் மிக்க கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

எந்திரவியல் தொழில்நுட்பத்துறையில் ஆர்வம் கொண்டவர்களுக்கும் மாணவர்களுக்குமான கருத்தரங்கு ஒன்று யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் நேற்று காலை 10மணிக்கு பிராந்திய ஆணையாளர் எஸ் ஞானேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் தொழில்நுட்ப பீடாதிபதி எந்திரி சிசில் பொன்சேகா தலைமையில் 9பேர் கொண்ட பேராசிரியர் குழு விசேடமாக கலந்து கொண்டது.

கருத்தரங்கில் உரையாற்றிய பீடாதிபதி சிசில்பொன்சேகா யாழ். பிராந்திய நிலையத்தின் அவலநிலையை மாற்ற ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். எந்திரவியல்நுட்ப பாடத்துக்கு மாணவர்களின் தொகை அதிகரிக்க மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாடநெறிக்கான பரீட்சைகள் ஆய்வுகூட பரிசோதனைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

கலந்துரையாடலில் பீடாதிபதிசிசில்பொன்சேகா, Dr. விமலவீர (புடவைக்கைத் தொழில்), Dr. S A. அரியதுரை (சிரேஷ்ட விரிவுரையாளர்), Dr. சரத்சந்திர, Dr சமன்வியாங்கொடை (உதவிப் பதிவாளர்), Dr மனோகாந்தன், Dr. லியனகே, திரு. இந்திரஜித் ஆகியோர் பங்குபற்றினர். (க- 9)

# சீரழிந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் சந்தர்ப்பம் இது

## அமைச்சர்மிலிந்ததெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சீரழிந்து போயுள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை முறையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்;

இவ்வாறு பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் தெரிவித்துள்ளார்;

மேற்படி அமைச்சரின் அமைச்சுக்களை நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்குதொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொண்டுவருகிறது.

தனியார் மயமாக்கல் தொடர்பாக உரிய நடவடிக்கையினை மேற் கொள்வதற்கும், அவற்றின் மூலம் நன்மைகள் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (க-08)

# குரோஷிய அதிபர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

குரோஷியாவிற்கும் இலங்கைக்கும் இடையே வணிகத்தை ஊக்குவிக்கும் வகையில் குரோஷியாவின் அதிபர் சிப்பிமெசிஜ் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் அண்டை நாடான இந்தியாவில் இருந்து வந்துள்ள இவரை இலங்கை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ வரவேற்றார்;

இரு நாடுகளுக்கும் இடையே 1997 இல் இராஜதந்திர உறவு ஏற்பட்ட பின்னர் நடக்கும் உச்சி மன்ற விஜயம் இதுவாகும்.

குரோஷியா அதிபர் மெசிஜ் உடன் 15 உறுப்பினர்களைக் கொண்டவர்த்தக குழு ஒன்றும் இலங்கை வந்துள்ளது. (க-10)

# மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை நிராகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

சேருவில ரஜமகாவிகாரையின் பிரதமகுருவால் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுத்தொடர்பாக ஜனவரி மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் வாதப் பிரதிவாதங்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவதற்கு முன்னர், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றே பிரதமகுருவால் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இம்மனுவிற்கு சட்டமா அதிபர் கமலசபேசன் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

நாட்டில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு ஆனால் இதை நடத்துமாறு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு கிடையாது. எனவே இம்மனுவை நிராகரிக்குமாறும் சட்டமா அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை இம்மனு தொடர்பான ஆட்சேபனை மனுவை சமர்ப்பிக்குமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. (க-08)

# வடமராட்சி கரையோரப்பகுதியில் மின்சாரவிளக்குகள் அவசியத்தேவை

### கடற்றொழிலாளர்சங்கம் அரசஅதிபருக்கு கோரிக்கை

(மந்திகை)

வடமராட்சி கரையோரப்பகுதியில் கடற்றொழிலாளர் கடற்றொழிலிற்கு சென்று திரும்ப வசதியாக கரையோரப்பகுதியில் மின்விளக்கு வசதிகளை ஏற்படுத்தி தருமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசம் யாழ் அரசஅதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

பெருந்தொகையான வள்ளங்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்றன.

இந்நிலையில் பருத்தித்துறை முனைப்பகுதியில் அமைந்துள்ள வெளிச்சவீடு செயலிழந்துள்ளது கரையோர பகுதியில் மின்விளக்குகள் மின்சாரம் வழங்கப்படவில்லை;

இதனால் ஆழ்கடல் தொழிலில் ஈடுபடும்படகுகள் மாரிகாலத்தில் கரைதிரும்ப முடியாது அவலப்படுகின்றன. கடல்தொழிலாளர்கள் திசைமாறிச் செல்லும்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன;

எனவே உடனடியாக கரையோரப்பகுதியில் மின் இணைப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; (க-23)

# மின் வேலைகள் இது வரையில் இல்லை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியின் பெரும்பாலான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படுவரும் வேளையில் குறிப்பிட்ட பகுதிமட்டும் மின்சாரக் கம்பங்கள் கூட நாட்டப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்;

இது குறித்து சம்பந்தப்பட்ட சபையின் அதிகாரிகளைச் சந்தித்து உரிய முறைப்படி தெரிவித்தும் கூட எதுவித நடவடிக்கையும் இது வரையில் எடுக்கப்படவில்லையாம்.

இதேவேளையில் நீர்வேலிப் பகுதியில் மின் வயர்களுக்கு சைக்கிள் செயின் எறியும் வேலையில் சில ஈனப்பிறவிகள் ஈடுபட்டுவருவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. (க)

# இன்று கலந்துரையாடல்

(சுதுமலை)

இன்று மாலை 3.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை யாழ் நாவலர்வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் திண்மக் கழிவகற்றல் எனும் விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ் மாநகரசபை ஆணையாளர் மு ராமலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் 'திண்மக் கழிவு அகற்றும் நவீனமுறைகள்' தொடர்பாக கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட அதிகாரிகள் இது தொடர்பான விரிவுரைகள் ஆற்ற உள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அலுவலகப் பொறுப்பதிகாரிகள், மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ள உள்ளார்கள். (க-252)

காணாமல் போனோர் பற்றிய விளக்கம் கேட்டு

# டிசம்பர் 2 முதல்யாழ் செயலகம்முன் மாபெரும் மறியல் போராட்டம்

## செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த கால இராணுவநடவடிக்கை காரணமாக காணாமல் போனவர்களாகக் கருதப்படுபவர்களுக்கு நடந்தது என்ன?என்பன போன்ற விபரங்கள் வெளிக்கொணரப்படவேண்டும் எனக்கோரி எதிர்வரும் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி முதல்யாழ் செயலகம் முன்பாக மறியல போர் இடம் பெறும் என காணாமல் போனோர் சங்க செயலாளர் ச.சற்குணம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

- தமது கோரிக்கைகள் 14 நாட்களுள் நிறைவேற்றப்படவேண்டும் அல்லாவிடில் தொடர் மறியல் போர்
- செம்மணி புதைகுழி அகழ்வின் போது நீதியரசர் இளஞ்செழியன் முன்னிலையில் அகழ்ந்தெடுத்த எலும்புக்கூடுகள் பற்றிய விபரம், பெயர் அதற்கமைய எடுக்கப்பட்ட உண்மை விபரங்களை பெற்றுதரவேண்டும்.
- அரச குற்றப் புலனாய்வுப் பகுதியினரால் விசாரணை செய்யப்பட்ட எமது உறுப்பினர்களின் விசாரணை அறிக்கை உடனடியாக சங்கத்துக்கு பெற்று தர வேண்டும்.
- பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து 1996- 97ம் வருடத்தில் கைதாகி காணாமல் போனோருக்கு நடந்தது என்ன உயிருடன் இருப்பவர்கள் யார் கொல்லப்பட்டவர்கள் யார்போன்ற விபரங்கள் தெரியப் படுத்தல் வேண்டும்.

இதற்குரியமுடிவுகள் பெறப்படாதவிடத்து பொது அமைப்புக்களையும் காணாமல் போனோர் சங்கம் இணைத்து மேற்படி மறியல் போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் தெரிவித்துள்ளார்கள். (க-07-16)

# தேசிய கொள்கை திட்டம் விரைவில் அமுலாகும்

## பிரதமர் ரணில்தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர் காலத்தில்எமது நாட்டின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் தேசிய கொள்கைத் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் தெரிவித்துள்ளார்.

இக் கொள்கைத் திட்டம் அடுத்த வருடம் தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வடக்குகிழக்குப் புனர்நிர்மான புனர்வாழ்வு, மறுசீரமைப்புநடவடிக்கைகளை மேற்கொள்வது உட்பட பல்வேறு விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யப்பான், டோக்கியோ நகரத்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் இது சமர்ப்பிக்கப்படும் எனறும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நிதி தொடர்பாக 2 குழுக்கள் அமைக்க விருப்பதாகவும், அந் நிதியினை மேற் பார்வை செய்வதற்கு இலங்கை வங்கித் தலைவர் ஹெஞ்பாலேந்திரா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ஒஸ்லோ மற்றும். டோக்கியோ நகரில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தைத்தொடர்ந்து, சர்வதேச நாடுகளிடமிருந்து சுமார் 400 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (க-4)

# குடத்தனையில் இலவச கணனி பயிற்சி நெறி

(செம்பியன்பற்று)

குடத்தனை தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் கடந்த 16 ஆம் திகதி இலவச கணனி பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அழகுராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கடற்புலிகளின் தளபதிகளான சிலம்பரசன், பாரதி, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வல்வை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள், தென்னிந்திய திருச்சபை குடத்தனை போதகர், மணற்காடு பங்குத் தந்தை ஆகியோர் சலந்து கொண்டனர்; (க-42)

# பஸ்ஸை ஓடவைப்பதற்கு ஆட்களைத்தேடும்சாரதிகள்

## நெடுந்தீவில் சம்பவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் பாவனையில் உள்ள வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ் வண்டிக்கு சுயாதீனமாக இயங்கும்மோட்டார் பழுதடைந்துள்ளதில் பஸ்ஸை தள்ளியே ஸ்ராட் பண்ணவேண்டியுள்ளது

இதனால் சாரதி மற்றும் நடத்துநர் பெரிதும்சிரமமுறுவதாகவும் பஸ்ஸை தள்ளுவதற்குஆட்களைத் தேடி அலையவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் செயற்பாட்டினால் உரிய நேரத்திற்கு பஸ் சேவையை நடாத்த முடியாதுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது; (க-249)

பருத்தித்துறை ஆஸ்பத்திரியில்

# நுளம்புகள் பெருக்கம் நோயாளர் அவதி

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் நுளம்பு, இலையான், மூட்டைப் பூச்சிகள் பெருக்கம் அடைந்துள்ளன.

இதனால் விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக நோயாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறு மாதத்திற்கு மேலாக வைத்திய சாலைக்கு விசிற வேண்டிய மலத்தியோன் மருந்து விசிறப்படாமலும், மழையினால் வளர்ந்துள்ள புற்கள், பற்றைகள் வெட்டப் படாமலும் இருப்பதால் இப் பூச்சி இனங்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக தெரிய வருகின்றது.

கடந்த ஆறுமாதத்திற்கும் மேலாக இவ் வைத்தியசாலையில் மலத்தியோன் விசிறப்படவில்லை எனவும், வைத்தியசாலை சுற்றாடலில் புற்கள், பற்றைகள் அகற்றப் படாமல் இருப்பதும் நுளம்பு பெருக்கத்திற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. (க-23)

### பருத்தித்துறை ஆஸ்பத்திரியில்

# செயலற்ற நிலையில் எக்ஸ்-ரே பிரிவு

# அவல நிலையில் நோயாளர்கள்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் எக்ஸ்-ரே கதிர் இயக்கப்பிரிவு கடந்த நான்கு மாதகாலமாக செயற்படாமையினால் அங்கு செல்லும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக நோயாளர் தரப்பில் தெரிவிக்கப் படுகிறது.

இப்பகுதியில் கடமை ஆற்றும் எக்ஸ்-ரே இயந்திர இயக்குநர்களுக்கு வழங்கப்படும் சம்பளக கொடுப்பனவுகளில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையால்சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கடமைக்குச்செல்லபின்னடிப்பதாலேயே இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இச் சம்பவத்தில் எக்ஸ்-ரே எடுக்கப்பட்ட நோயாளிகள் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்படுவதாகவும் இதனால் நோயாளர் பெரும் அசௌகரியங்களை சந்தித்துவருவதாகவும்மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-23)

### அடுத்த ஜனவரி முதல்

# இலங்கையில் இந்திய எண்ணெய் கம்பனிகள்

(கொழும்பு)

இந்திய எண்ணெய் கம்பனி ஜனவரி மாதத்தில் இருந்து இலங்கையில் அதன் வர்த்தக நடவடிக்கையை ஆரம்பிக்க உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கென 12 சந்தை வாய்ப்புக்களை வழங்கியமையை அடுத்தே இந்திய எண்ணெய் கம்பனி இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

இதன் முதலாவது நடவடிக்கையாக இலங்கையில் உள்ள 100 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இந்திய கம்பனியிடம் கையளிக்கப்படும் என பெற்றோலிய கூட்டுத் தாபனத் தலைவர் தெரிவித்தார்.

பாவனையாளர்களுக்கு இவ் எண்ணெய் கம்பனி மூலம் எரிபொருட்களை விநியோகிக்க விருக்கின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட கால எல்லை வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்தியக் கம்பனிக்கு எரிபொருட்களை வழங்கும்.

அதன் பின்னர் வெளிநாடுகளில் இருந்து எரிபொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் எனவும் விமல்சேன கூறியுள்ளார்.

எரிபொருள் விலையை குறைப்பதற்கு நாட்டில் எண்ணெய் வர்த்தகத்தை போட்டியாக மேற்கொள்ள வசதியளிக்கும் வகையிலேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதனால் சூழல் மாசடைவதை தடுக்க முடியும் என விமல் சேன சுட்டிக்காட்டியுள்ளார். (க-10)

### நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை

# வடக்கு-கிழக்கில் படையினருக்கு

# பல கடமைகள் உண்டு

### ஜனாதிபதி சுட்டிக் காட்டு

(கொழும்பு)

நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படும் வரை, வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடமையாற்றும் பாதுகாப்பு படையினரால், நிறைவேற்ற வேண்டிய பல முக்கியகடமைகள் உண்டு.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல இராணுவ பட்டதாரிகளுக்கான 12 வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து பேசுகையில்; நாட்டின் இறைமை, பாதுகாப்பு, வடக்குகிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களின் மனிதஉரிமைகளைபாதுகாப்பது போன்ற முக்கிய பொறுப்புக்கள் இராணுவத்தினரிடமும் பொலிஸாரிடமும் உண்டு.

தற்போது மோதலும், இராணுவ நடவடிக்கைகளும் இல்லை. ஆனாலும், யுத்தம் நிலவிய சந்தர்ப்பங்களை விட, படையினரிடம் இருந்து முக்கியமான சேவைகளும், பொறுப்புகளும் தற்போதைய கால கட்டத்திலேயே எதிர் பார்க்கப்படுகிறது.

நாம் இன்று யுத்தத்திற்கும் சமாதானத்துக்கும் இடையிலே ஓர் காலப்பகுதியிலேயே வாழ்ந்து வருகின்றோம் என்பதே நாட்டு மக்களினதும், எனதும் எதிர் பார்ப்பாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ் வைபவத்தில் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-08)

## சாவல்கட்டில் அபிவிருத்திக்குழு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாவல்கட்டு J/131 கிராம அலுவலர் பிரிவுக்குள் ஓர் கிராமிய அபிவிருத்திக் குழு அமைக்கப்பட்டது.

பிரதேசசெயளலர் நா.வேதநாயகனின் வேண்டுகோளிற்கிணங்க மேற்படிகிராம அலுவலர் திருமதி எஸ்.பிரேசிலா தலைமையில் அண்மையில் மகாத்மா சனசமூக நிலையத்தில் தெரிவு இடம் பெற்றது.

அபிவிருத்திக் குழுத்தலைவராக இ.மனோகரன், செயலாளர் கு.குணசேகரன் பொருலாளர் ஆ கோவிந்தராசா ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

சண்டிலிப்பாய் பகுதி சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நலஉத்தியோத்தார், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-258)

### பாராளுமன்ற கலைப்பு விவகாரம்

# ஜனாதிபதியின் அறிவிப்பு பரிசீலிக்க முடியாதது

(கொழும்பு)

டிசம்பர் 05 ஆம் திகதிக்கு பின்னர் தான் பாராளுமன்றத்தை சிலவருடங்களுக்குக்கலைக்கப் போவதில்லை என்று சபாநாயகர் ஜோசப் மைக்கேல் பெரேராவுக்கு ஜனாதிபதி எழுத்து மூலம் வழங்கிய உறுதிமொழி 11 வது பாராளுமன்றத்திற்கே பொருத்தமானது. இன்றைய பாராளுமன்றம் 12 வது என்பதால் ஜனாதிபதியின் கடிதத்திற்குரிய சட்டப்பின் விளைவுகள் பரிசீலிக்கப்படமுடியாதன.

இவ்வாறு சபைமுதல்வர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டாரபாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதியினதும், பிரதமரினதும் பதவிக்காலம் பற்றிய விவகாரம் குழுமட்டத்தில் விவாதிக்கப்படாதுளனஅமைச்சர்தெரிவித்தார். (க)

# மட்டு. ஆலயங்களின் பாதிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்களின் பாதிப்புக் கொடுப்பனவாக 25 இலட்சம் ரூபா இந்து விவகார அமைச்சினால் நேற்று முன் தினம் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது, இதற்கான காசோலையினை அமைச்சர் தி. மகேஸ்வரன் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது அப்பிரதேச மக்களாலும், இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளும், ஆலய நிர்வாகிகளும் சுமார் 700 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை அமைச்சரிடம் சமர்ப்பித்திருந்தனர்.

இவற்றில் 650 முறைப்பாடுகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டன என்றும், ஏனைய முறைப்பாடுகள் குறித்து விரைவில் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன என்றும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-8)

# ஆசிரியர் செயலமர்வு

(செம்பியன்பற்று)

ஜேர்மன் நாட்டின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு கல்விக்கழகத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்களிற்கான ஆங்கில ஆசிரிய செயலமர்வு யா/மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் பதினைந்தாம் திகதி வரை நடைபெறவுள்ளது. இது ஒரு வதிவிடப்பயிற்சியாக அமைகின்றது.

இச்செயலமர்வில் மருதங்கேணி, பளைக்கோட்டப் பாடசாலைகளில் இருந்து ஒவ்வொரு ஆசிரியர் வீதம் தெரிவு செய்து இக்கருத்தரங்கு நடைபெற ஏற்பாடாகி உள்ளது. (க-42)

# அமைச்சர் மகேஸ்வரனுக்கு 170 மில்லியன் நிதிஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனிற்கு 11மாதங்களின்பின்னர் ஸ்ரீலங்கா அரசு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவருடம் 170 மில்லியன்ரூபாயினை அரசுஒதுக்கீடு செய்துள்ளபோதிலும் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்ய இந்நிதி போதாது என்பதையும் அமைச்சர் மகேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளதுடன் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிமத்தியிலும் தமக்கு இந்நிதியை ஒதுக்கீடு செய்தமைகுறித்து வரவேற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (க-10)

## அலரி மாளிகையில் இப்தார் நோன்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் இப்தார் நோன்பு திறக்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் முஸ்லிம் அமைச்சர்கள், எதிர்க் கட்சிப்பிரமுகர்கள் வெளிநாட்டு பிரமுகர்கள், உலாமாக்கள், ஊடகவியலாளர்கள், உட்பட பலரும் பங்குபற்றினர்.

பொ. ஐ. மு யின் முன்வரிசை எம். பி. ஏ. எச். எம். பௌசி, மு கா. தலைவர் ராவூப் ஹக்கீம், பகிஷ்கரிப்புக் குழுத் தலைவர் ஏ. எல். எம். அதாவுல்லா ஆகியோரும் அங்கு காணப்பட்டனர். சமாதானேம் வேண்டிய விசேட தொழுகையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதியும், பிரதமரும் இப்தார் கொண்டாட்டங்களை நிகழ்த்தும் மரபு இந்தியாவின் பல வருடங்களாகவே இருந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# வீடியோ படக்கருவி சேதமாக்கப்பட்டது

### குடத்தனையில் சம்பவம்

(செம்பியன்பற்று)

குடத்தனை, மணற்காட்டுப்பகுதியில் மண் அகழ்வு. மற்றும் சவுக்குமரம் அழித்தல் சம்பந்தப்பட்டவற்றை வீடியோ படம்பிடிக்கமுற்பட்டவேளையில் அவருடைய கசற் மற்றும் படக்கருவிகள் பாதுகாப்புதுறையைச்சேர்ந்தோரால் சேதமாக்கப்பட்டது.

வளம்பேணும் அமைப்பை

சேர்ந்த பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டஇடத்தில்வீடியோ படம்பிடிக்க முற்பட்ட போதே இவ் அனர்த்தம் இடம்பெற்றது.

இதுசம்பந்தமாக உரியவர்களிடம் எடுத்துக்கூறியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் சம்பந்தப் பட்டவருக்கு ரூபா 10 ஆயிரம் வரையில் நட்டம் ஏற்பட்டது என்று மேலும் தெரிவிக்கப் படுகிறது. (க-42)

### வாசனைத்திரவிய நிறுவனங்களுக்கு

# நச்சுதிரவம் விநியோகம் கலால் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாசனைத் திரவிய உற்பத்தி நிறுவனங்களுக்கு நச்சு இரசாயனத் திரவத்தை விநியோகித்தமை தொடர்பாக கலால் திணைக்களத்தின்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வாசனை திரவிய உற்பத்தி நிறுவனங்களுக்கு ஸ்பிரிற் அல்லது அற்ககோலை விநியோகிக்கும் பொறுப்பை கலால் திணைக்களம் மேற்கொண்டுவந்தது.

வாசனைத் திரவியங்களுக்கு அற்ககோலின் செறிவைக் குறைக்க மேற்குறிப்பிட்ட நச்சு இரசாயன திரவம் பயன்படுத்தப்படுவதாகவும்மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்துடன் கலால் திணைக்கள உயர்அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும், பிரஸ்தாபநபர் சுங்கத்திணைக்கள ஊழியர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-10)

# காவலரண் அமைப்பதை படையினர் கைவிட்டனர்

(மந்திகை)

நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் படையினரால் புதிய காவலரண்கள் அமைக்கும் முயற்சியை படையினர் கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாகன உரிமையாளர் காட்டிய எதிர்ப்புணர்ச்சியை அடுத்தே தமது காவலரண் அமைக்கும் முயற்சியை படையினர் கைவிட்டனர்.

நெல்லியடி - கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கியின் முன்பாகவே படையினர் காவலரண் அமைக்க முயற்சித்தனர் எனக் கூறப்படுகிறது. (க-23)

# இன்று ஒரு தகவல்

## ஆத்திகமும் நாத்திகமும்

ஆத்திக- நாத்திக வாதம் என்பது உலகம் எப்போது ஆரம்பமானதோ அப்போதே ஆரம்பமாகிவிட்டது. உலகம் எதுவரையும் இருக்குமோ இதுவும் அதுவரையும் இருக்கும். அதனால் அதைப் பற்றிப் பேசி இப்போது நாம் ஒரு முடிவுக்கு வர முடியாது. எந்தப் பாதையில் போனாலும் நமக்கு ஒரு ஞானத் தெளிவு ஏற்பட வேண்டும். அதுதான் முக்கியம்.

ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸா ஓர் உதாரணம் சொல்கிறார். குரங்கு இருக்கிறதே அது தன்னுடைய குட்டியைத் தூக்கிக் கொண்டு போவதைப் பார்த்திருப்பீர்கள் அதே மாதிரி பூனை இருக்கிறதே அது தன்னுடைய குட்டியைத் தூக்கிக்கொண்டு போவதையும் பார்த்திருப்பீர்கள் இரண்டுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கின்றது, அதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? குரங்கு விஷயத்திலே குட்டி தன்னுடைய தாயைப் பற்றிப் பிடித்திருக்கும். ஆனால் பூனை அப்படி இல்லை தாய் தன்னுடைய குட்டியைக் கௌவிப் பிடித்திருக்கும்.

குரங்குக் குட்டி தன்னுடைய தாயைத் தானாகவே கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது அது தன்னையே சார்ந்து இருக்கிறது, அதாவது அது கீழே விழுவதும், விழாததும் அதன் கையிலே தான் இருக்கிறது, தாய்க்குரங்குதன் பாட்டுக்கு கிளைக்குக்கிளை தாவிப் போய்க் கொண்டே இருக்கும் குட்டி பிடியை விட்டு விட்டதென்றால் பேச்சு பொத்தென்று கீழே விழ வேண்டியது தான், தன்னையே சார்ந்திருக்கிற குரங்குக் குட்டியினுடைய நிலைமை இது. ஆனால் பூனைக்குட்டியினுடைய நிலைமை இப்படி இருப்பதில்லை. அது இருக்கிற இடத்திலேயே இருந்து கொண்டு தாயைப் பார்த்துப் பரிதாபமாகக் கத்தும்.

தாய்ப்பூனை ஓடிவந்து தன்னுடைய குட்டியைக் கௌவித் தூக்கிக்கொண்டுபோகும் பூனைக்குட்டி தன்னைச் சார்ந்து இருப்பதில்லை. அது தன்னுடைய தாயையே சார்ந்து இருப்பதனாலே அதற்கு அபாயம் ஒன்றும் இல்லை. இதை மனிதன் யோசித்துப் பார்க்க வேண்டும் என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

மனிதன் தன்னையே சார்ந்திருப்பதற்கும். இறையருளைச் சார்ந்திருப்பதற்கும் உள்ள வித்தியாசம் இது தான். எப்படி இருந்தாலும் இரண்டு வகையான கொள்கைகளும் உலகம் உள்ளவரையும் இருக்கும் என்பது தத்துவஞானிகளுடைய கருத்து. ஏனென்றால் இந்த விவாதத்தில் உறுதியாக ஒரு முடிவுக்கு வருவது மிகவும் கஷ்டம் தான்.

ஓர் ஆற்றங்கரை. அதன் ஓரமாக ஒரு அரசமரம் அதற்கு அடியில் ஒரு கடவுள் சிலை. பெரிய கருங்கல்லால் செய்யப்பட்ட கனமான சிலை. ஆத்திகர் ஒருவர் அதைச் சுற்றிச் சுற்றி வந்து தியானத்தில் போட்டுக் கொண்டார். இந்தச் சமயத்தில் அந்த வழியாக நாத்திகர் ஒருவர் வந்தார். அவர் கையிலே நாய்க்குட்டியைப் பிடித்துக் கொண்டு வந்தார். ... ஆத்திகர் சிலையைச் சுற்றி வருவதைப் பார்த்ததும் இவருக்குச் சிரிப்பு வந்து விட்டது. என்னையா இது! இந்தக் காலத்திலும் இப்படி இருக்கிறீர்களே! என்றார்.

'எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால் சுற்றிவருகிறேன்' என்றார் அவர் 'எனக்கு நம்பிக்கையில்லை. அதனால் சிரிக்கிறேன்' என்றார் இவர். இருவருக்கும் விவாதம் ஆரம்பமாகிவிட்டது. 'எதற்கும் ஆதாரம் தேவை' என்றார் இவர். 'நிரூபிக்க முடியாததுதான் அது. உணர்ந்துதான் புரிந்து கொள்ளவேண்டும்' என்றார் அவர். இவர் 'என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை' என்றார். அவர் அப்படியென்றால் நான் மிகவும் உணர்கின்றேன்' என்றார். இப்படிப் பேசிக்கொண்டே போனார்களே தவிர, ஒரு முடிவுக்கு வரவில்லை. வரமுடியவில்லை.

கடைசியாக ஒரு சோதனை பண்ணிப் பார்த்து விடுவோம் என்ற முடிவுக்கு வந்தார்கள். அந்த நாத்திகர் தான் இந்த யோசனையைச் சொன்னார் 'இப்போது நீங்கள் உயிரில்லாத அந்தச் சிலையை நம்புகிறீர்கள். நான் உயிருள்ள இந்த நாய்க்குட்டியை நம்புகிறேன். நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கிற அந்தச் சிலையைத் தூக்கி இந்த ஆற்றில் போடுவோம். அதேமாதிரி நான் நம்பிக்கை வைத்திருக்கிற இந்த நாய்க்குட்டியைத் தூக்கி ஆற்றில் போடுவோம். இவை இரண்டிலும் எது நீந்திக் கரையேறி நம்மிடம் வந்து சேரும்? பார்த்து விடுவோமா இது நாத்திகருடைய சவால்,

இந்தச் சவாலை ஆத்திகர் ஏற்றுக்கொண்டார். ஆனால் வேறு மாதிரியாக! 'நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இப்படிச் செய்வோம்' என்றார். எப்படி? என்றார் நாத்திகர், 'நான் நம்பிக்கை வைத்திருக்கிற இந்தச் சிலையை இப்படிப் போட்டு... அதன்மேல் உங்கள் நாய்க்குட்டியைத் தூக்கிப் போட்டுப்பார்ப்போம். அதன் பின்பு அதே மாதிரி உங்கள் நாய்க்குட்டியை இப்படிப் போட்டு... அதன் மேல் இந்தச்சிலையைத் தூக்கிப் போடுவோம். என்ன ஆகின்றது என்று பார்க்கலாமா?' என்று ஆத்திகர் கேட்டது தான் தாமதம், நாத்திகர் நாய்க்குட்டியைப் பிடித்துக் கொண்டு வந்த வழியிலேயே போய்விட்டார்.

இவர்களிருவரும் இப்படிப் பிரிந்து போய்விட்டார்களே தவிர விவாதம்முடிந்து போகவில்லை. அது என்றைக்கும் இருக்கும். அது இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் ஒன்று... அகங்காரம் இருக்கிறவரைக்கும் மனிதனுக்குக் கஷ்டம் இருந்து கொண்டே தான் இருக்கும். அதைப் புரிந்து கொண்டால் போதும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வீதிக் கடவைகள் அமைப்பு

(சண்டிலிப்பாய்)

பாதசாரி கடவைகள் அமைப்பு மனிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலைகள், சந்தைகள் மற்றும் பொது இடங்கள் முன்பாக பாதசாரிகளுக்கான வீதிக் கடவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் ஏற்பட்டு வரும் வாகன விபத்துக்களை தடுக்கும் முகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் மேற்படி கடவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந் நடவடிக்கைக்கு மானிப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸாரும் உதவி வருகின்றனர். (க-258)

# மன். முஸ்லிம்களை வெளியேறுமாறு எல்லாளன் படை துண்டுப்பிரசுரம்

(மன்னார்)

இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பு மன்னார் மாவட்டத்தில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேறுமாறு எச்சரிக்கை செய்யும் துண்டுப் பிரசுரம் ஒன்று 'எல்லாளன் படை' என்ற பெயரில் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'எல்லாளன் படை' என்ற பெயரில் மன்னார் முஸ்லிம் பள்ளிவாசல் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்திலேயே இந்தஎச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மன்னாரில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற வேண்டுமென்று விதித்திருந்த காலக்கெடு இம்மாதம் 25 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. 1990 ஆம் ஆண்டு விரட்டப்பட்டபோது 5 பவுண் நகைகளுடன் சென்றீர்கள், ஆனால் இம்முறை உங்கள் பிள்ளைகளின் பிணத்தைச் சுமந்துகொண்டுதான் செல்லப்போகிறீர்கள்.

மன்னார் மாவட்டம் தமிழ் மக்களின் தாயகமாகும். இங்கு முஸ்லிம்களுக்கு எந்த விதமான பங்கும் இல்லை. உங்களுடைய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில்தான் இவ்வாறு செயற்படுகிறீர்கள்.

ஜிகாத் என்ற அமைப்பை உருவாக்கித் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவது குறித்தும் நாங்கள் அறிவோம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துண்டுப் பிரசுரம் தொடர்பாக வவுனியா பொலிஸில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வில்பிரட் மகாநாமவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, மன்னார் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரும் இத்தகைய துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டபோது, இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு நபர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இராசி பலன்

18-11- 2002
(கார்த்திகை 2 திங்கள்)
சதுர்த்தசி வை 5. 53 வரை
அச்சுவினி பி. ப 4. 03 வரை
இராகு காலம்-7. 38-9. 08
நல்ல நேரம்-12. 08-1. 38
கார்த்திகை சோம வாரம்

### மேடம்
தேக நலன், பாக்கியம், சயன சுகம், காரிய சாதனை

### இடபம்
மனக்கிலேசம், சயன சுகக் குறைவு, பிரயாண அலைச்சல், வேலைக் கஷ்டம்.

### மிதுனம்
இஷ்ட சித்தி, புகழ், மன மகிழ்ச்சி, உறவினர் வருகை.

### கடகம்
தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், பெரியோர் உதவி, நல்ல செய்தி.

### சிங்கம்
வயிற்றுக் கோளாறு, பிரயாணம், முயற்சி தாமதம், புதிய தொழிற்பாடு.

### கன்னி
காரிய தாமதம், எதிர்பாராத அச்சம், சிறுவியாதி, போசன சுகம்.

### துலாம்
காரிய நன்மை: செய்தொழில் விருத்தி, அபூர்வ சந்திப்பு, சுவாரஸ்யம்.

### விருச்சிகம்
உடல் நலம், மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி.

### தனுசு
வியாபார விருத்தி, குடும்பக்கவலை, முயற்சி தாமதம், உடல் நலக்குறைவு.

### மகரம்
தாய்வழி உறவு, நண்பர்கள் உதவி, திடீர் நன்மை, மனச் சஞ்சலம்.

### கும்பம்
இனிய சம்பவம், நல்லவரவேற்பு, காரிய அனுகூலம், கூட்டு முயற்சி.

### மீனம்
மாதர் நட்பு, வாக்கு கலகம், உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

# மேலாதிக்கம் உடையது பாராளுமன்றம் மட்டுமே
## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் அதிகாரங்களும் பாராளுமன்றத்தினால் வழங்கப்படுவதால் பாராளுமன்றமே மேலாதிக்கம் உள்ளது, சட்டமொன்றை இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்தினுடையது. நீதித்துறையதிகாரங்கள் யாவும் பாராளுமன்றத்திடமேயுள்ளன. ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கும் நிறைவேற்று அதிகாரங்களை வழங்குவதும் பாராளுமன்றமே, இவ்வாறு, வரவுசெலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும் போது தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டின் பிரான்சிய அரசியலமைப்பைத் தழுவிய அரசியற் சட்டத்தின் பிரகாரம், இறுதியாக வழங்கப்பட்ட மக்களாணையே முதல் பெறப்பட்ட மக்களாணையை விட மேலுரிமை கொண்டதாகும்.

இதன்படி இன்றைய அரசாங்கத்திற்கே மேலுரிமை உண்டு. எதிர் வரும் மாதங்களில் பாராளுமன்றமே மேலாதிக்கமுள்ள நிறுவனம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன: எமது அதிகாரங்களை வரையறை செய்யும் கடமை எமக்குண்டு.

அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் தெளிவான வரையறைகளுடன் நிலையியற் கட்டளைகள் செயற்படுகின்றன: எமது பாராளுமன்றத்திலும் அமைச்சுகளினதும், குழுக்களினதும் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும் என்றார். (க)

# இலங்கை - தாய்லாந்து வர்த்தக ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கையும் தாய்லாந்தும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் விரைவில் கைச்சாத்திடவுள்ளன.

வர்த்தகத் திணைக்களம் இது தொடர்பான திட்டங்களை தற்போது தயாரித்து வருகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளக் கூடிய பொருட்களின் பட்டியலை இவ்வொப்பந்தத்தில் சேர்த்துக் கொள்வதற்கு வழி வகுக்கும் வகையில் திட்டங்களை தயாரிக்குமாறு வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தாய்லாந்துக்கான விஜயம் ஒன்றை வர்த்தக அமைச்சர் அண்மையில் மேற்கொண்டிருந்தசமயம், வர்த்தகத்துறையில் முயற்சிகளை மேற்கொள்வதுபற்றி அந்நாட்டு அதிகாரிகளுடன் கலந்தாலோசனை நடத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-08)

# சர்வதேசஅங்கீகாரத்துடன் அரச திணைக்களங்கள் தனியார் மயப்படுகிறது

(கொழும்பு)

சர்வதேச அங்கீகாரத்துக்கு ஏற்றவகையிலேயே அரச திணைக்கள மறுசீரமைப்பு ஆணைக்குழு அரசநிறுவனங்களை தனியார் மயப்படுத்தி வருகின்றது என விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் போது வெற்றி தோல்வி ஆகிய இரண்டையும் எதிர்நோக்க வேண்டி உள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் விரிவாக கலந்துரையாடியதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-08)

## நாளை திருக்கார்த்திகை

(கல்வயல்)

திருக்கார்த்திகை தீபத்திருநாள் நாளை செவ்வாய்க்கிழமை இந்துக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வீடுகளில் அனுஷ்டிக்கப்படும் சர்வாலயத்தீபத்தை அடுத்து புதன்கிழமை குமாராலய தீபம் ஆலயங்களில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(க)

### பிராந்திய விடயங்கள் மட்டுமல்ல

# மத்திய கட்டமைப்பு பற்றியும் ஆராயப்பட வேண்டும்

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்று பேச்சுக்களின் பின்னர் மூன்று உபகுழுக்களை நியமிப்பது பற்றி தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிகின்றோம். ஒன்று பாதுகாப்பு பற்றிய விடயங்கள் தொடர்பாகவும், புனர்நிர்மாணம், மீளக்குடியமர்தல், மீளக்குடியேற்றம் ஆகிய பிரச்சினைகளை கவனிக்க இரண்டாவது குழுவும் இறுதி அரசியல் தீர்வு பற்றி கவனிக்க மூன்றாவது குழுவும் நியமிக்கப்படவிருக்கின்றன.

தனிநாட்டுக்கானகோரிக்கை இருந்த வரையில் மைய அரசின் கட்டமைப்புப் பற்றிய அக்கறை தமிழ் தலைமைத்துவத்துக்கு இருக்கவில்லை; பதவிக்கு வந்த எல்லா அரசுகளும் மத்திய கட்டமைப்பு பற்றிய கவலையே இல்லாமல் பிரதேச அலகுகளுக்கு அளிக்கப்படக் கூடிய அதிகாரங்கள் பற்றிய யோசனைகளையே முன்வைத்து வந்தன; பெரும்பான்மைத்துவத்தின் முக்கிய அம்சமாக விளங்கும் மத்திய அமைப்பினை திருத்தியமைக்க வேண்டிய விடயம் கவனிக்கப்படாமலே இருந்துவிட்டது. சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறையிலான (Federal or Confederal) அமைப்புகள் பற்றி தமிழர் தரப்புகவனம் செலுத்துவதாக செய்திகள் கூறுகின்றன; எனவே பிரதேச விஸ்தீரணம், பிரதேச அலகுகளுக்கான அதிகாரங்கள் பற்றி மட்டுமல்ல மத்திய அரசின் கட்டமைப்பு பற்றியும் கவனம் செலுத்தப்படவேண்டிய கட்டாயப் எழுந்துள்ளது. ஏனென்றால் அதுதான் எல்லைகளில் அதிகாரப் பிரிவுகளாக அமையப் போகும் வெவ்வேறு கலாசாரங்களைக்கொண்ட குழுக்களை ஒன்றாகப் பிணைத்து வைத்திருக்கும் அமைப்பாக விளங்கப்போகின்றது.

அரசியல் தீர்வொன்றை உருவாக்குவதற்கான உபகுழுவானது, கனடா, தென்னாபிரிக்கா, ஹொங்ஹொங் போன்ற நாடுகளின் அரசியல் யாப்புகளையும் ஆராயப் போவதாக தகவல்கள் கூறுகின்றன. இந்நாடுகள் ஒவ்வொன்றிலும் மக்களின் ஆதிபத்திய உரிமையானது மத்திய ஆட்சிக்கும் பிராந்திய அலகுகளுக்குமிடையில் நிரந்தர அடிப்படையில் பகிரப்பட்டுள்ளமையே இவைகளிலுள்ள முக்கிய அம்சமாகும். பிராந்திய அலகுகளால் அனுபவிக்கப்படும் ஆதிபத்திய உரிமைகளின் அளவைக் கொண்டே இந்த ஏற்பாட்டினை சமஷ்டி அல்லது கூட்டாட்சியாக இனம்காணலாம். இந்த ஏற்பாடு நேர்மாறாக அமைந்து மத்திய அரசே பெரும்பாலான அதிகாரங்களை வைத்துக்கொள்ளுமானால் அது ஒற்றைஆட்சியாகவே இருக்கும்.

> இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக பல்வேறு மட்டங்களில் நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வரும் அதேவேளையில் அரசியல் சிந்தனைகளும் தென்னிலங்கையில் பல்வேறுவிதமாக வெளியிடப்பட்டு வருகின்றன, அவ்வாறான ஒன்றை இங்கு தருகின்றோம்.
>
> நெவில் லடுவாஹெட்டி என்பவர் ஆங்கிலத்தில் எழுதியதை எஸ். சுந்தர் தமிழில் சுருக்கித் தருகிறார்.

### ஒற்றையாட்சியும் கூட்டாட்சியும்

இலங்கையின் மிகப் பெரும்பான்மையான மக்களின் விருப்பம் ஒற்றை ஆட்சி முறையாகவே இருந்து வந்துள்ளது; ஏனென்றால் நாட்டின் பிரதேச பாதுகாப்பை அது உறுதிசெய்கிறது. மாறாக எல்.ரி.ரி.யினர் கூட்டாட்சி முறையொன்றை விரும்புவதாகத் தெரிகின்றது எதிர்காலத்தில் பிரிந்து போகும் முடிவொன்றை மேற்கொள்வதற்கு இது ஒரு நெகிழ்வுத்தன்மையைக் கொடுக்கும் என்று அவர்கள் கருதக்கூடும். இறுதி முடிவு பிரிவினையாகவே இருக்கும்.

ஆகவே குறித்த உபகுழுவின் ஆய்வானது சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைகளை மட்டும் இல்லாமல் ஏனைய மாற்று முறைகளையும் உள்ளடக்குவதாய் அமைதல் வேண்டும். ஏனெனில் எந்த ஒரு ஏற்பாடும் இறுதியில் சட்டரீதியாக நடைமுறை சாத்தியமாவதற்கு பாராளுமன்றில் மூன்றுக்கு இரண்டு வீதத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் கருத்துக் கணிப்பின் மூலம் மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### அவர்கள் எவ்வாறு ஒற்றுமையாக இருக்கிறார்கள்?

எந்தச் சமூகத்திலும் கலாசார வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன; சுவிட்சர்லாந்தில் ஜேர்மன் பேசும் கொன்ரோன்களில் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தர்களுக்குமிடையில் சமயப் பிரிவினைகள் காணப்படுகின்றன. பிரஞ்சு பேசப்படும் கொன்ரோன்களிலும் பிரிவினைகள் இருக்கின்றன; பெல்ஜியம், நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்காவிலும் இதேநிலைதான்; இவ்வாறு பிரிவினைகள் இருந்தபோதிலும் இவை ஸ்திரமாகவும் ஜனநாயக அமைப்போடும் இருந்து வருகின்றன. இதற்கு பிரதான காரணம் என்னவென்றால் ஒருமைப்பாட்டுடனான அரசியலுக்கு சாதகமான நிலைமைகளை மத்திய ஆட்சி முறையில் அவர்கள் ஏற்படுத்திக்கொண்டிருப்பதே என்க.

அரசாங்கத்தை மீள் அமைப்பு செய்வதற்கான மக்கள் முன்னணி அரசின் வரைவு ஆலோசனைகளில் பிராந்தியங்களுக்கு அதிகார பகிர்வு சம்பந்தமான அவர்களின் அமைப்பு முறையில் மத்திய அரசின் நிலைபற்றி புதிய ஏற்பாடுகள் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை அந்த ஆலோசனைகளின் முக்கிய வரைவாளராக பேராசிரியர் பீரிஸ் அவர்களே இருந்துள்ளமையாலும் அரசியல் விடயங்கள் தொடர்பான உபகுழுவில் தேசியநலன்களை அரசின் சார்பில் கவனித்துக் கொள்பவரும்அவர் ஒருவராகவே இருப்பதாலும் பிராந்திய ஆதிபத்தியத்தை உறுதிப்படுத்துவதில் மத்திய அரசின் பங்கே முக்கியம் என்று கருதும் அரசியல் விஞ்ஞானிகளின் கருத்துக்கு அதிக கவனம் செலுத்தப்படும் என்று எண்ண இடமில்லை;

(இக்குழுவில் எல்.ரி.ரி சார்பில் இருவரும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஒருவரும் இடம்பெறுவர்)

### போதாது

சுதந்திரத்துக்கு பின்னர் மத்திய அரசின் கட்டமைப்பை சீரமைக்கும் யோசனையொன்றை- நிர்வாகக் குழு அமைப்பது தொடர்பாக முதன்முதல் ஐக்கிய முன்னணி அரசேமுன்மொழிந்தது இந்த முறையின் படி பாராளுமன்ற உறுப்பினர் அனைவருமே பல்வேறு குழுக்களில் நிரந்தரமாக இடம்பெறுவார்கள். குழுவின் தலைவர் இயல்பாகவே கபினட் அமைச்சர் அந்தஸ்தைப் பெறுவர். நடைமுறையில் இருக்கும் அமைப்பு முறையில் இது உண்மையாகவே ஒரு தீர்க்கமான சீரமைப்பைக் காட்டினாலும் போதுமானதாக இல்லை பாராளுமன்றில் அல்லதுநாட்டில் உள்ள இனங்களின் அமைச்சரவை பிரதிநிதித்துவத்தை அரசியல் சட்டம் மூலமாக உறுதிப்படுத்த வேண்டும். இது குழுக்களின் தலைவர்கள் பதவிகளில் எத்தனை சிறுபான்மை உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் என்பதும் அமைச்சரவையில் எத்தனைபேர் இடம்பெறுவார்கள் என்பதும் அடங்கும் (பி)

(தொடரும்)

### வரவு - செலவு

வோருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் எனவும்,

இவை ஜனவரி மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார் (ஐ)

## மீனவர் வேண்டுகோள்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மீனவர்கள் தமது எதிர்கால நலன்களை கருத்திற் கொண்டு ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என திருகோணமலை தமிழ் மீனவர் அபிவிருத்தி அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது

இவர்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதன் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை இவ் அமையம் மேற்கொண்டுள்ளது; (க-10)

## கிணறு துப்புரவு செய்யப்பட்டது

(சுதுமலை)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையில் உள்ள குடிநீர் பெறும் கிணறு அண்மையில் வலி-மேற்கு பிரதேச சபையினரால்நல்ல முறையில் இறைத்து துப்புரவு செய்யப்பட்டுள்ளது;

மிகவும் ஆழம் கூடிய இக்கிணறு கடந்த பல மாதங்களாக துப்பரவு செய்யப்படாமையால் அங்கு சிகிச்சை பெறும் நோயாளர்கள் பல அசௌகரியங்களிற்கு மத்தியில் குடிநீருக்கு கஷ்டப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது (க-252)

### ஆனைக்கோட்டை

## கடையில் திருட்டு

(சுதுமலை)

ஆனைக்கோட்டை சந்தியில் யாழ். வீதியில் அமைந்துள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் கடை கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த உதிரிப்பாகங்களும் மற்றும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான ரயர் ரியூப் வகைகளும் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

கடையின் முன்வாசலில் அமைந்துள்ள கதவு கூரான ஆயுதம் மூலம் உடைக்கப்பட்டே இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க.252)

### பருத்தித்துறை- கொட்டடியில்

# மீளக் குடியமர அனுமதிக்காவிட்டால் எதிர்ப்பு போராட்டம் வெடிக்கும்

### பிரதமருக்கு அவசர கடிதம்

(மந்திகை)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் நிரந்தரமாக வசித்த மக்களை மீண்டும் அங்கு சென்று குடியமர அனுமதிக்கா விட்டால் எதிர்வரும் 28 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக எதிர்ப்பு போராட்டம் நடைபெறும்.

இவ்வாறு பருத்தித்துறை கொட்டடி கடல் தொழிலாளர் சங்கத்தினர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ;

பருத்தித்துறை நகரின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள மீனவர் குடும்பங்களின் குடியிருப்புக்கள் இராணுவ முகாமுக்குள் அமைந்துள்ளது.

இப்பகுதியில்உள்ள குடியிருப்புக்களில் வன்னியில் இருந்து மீளக் குடியமர்த்துவதன் பொருட்டு வந்த மக்களிற்கு படையினரால் அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சொந்தஇடங்களில் மீளக்குடியமரலாம் என எதிர் பார்ப்புடன் வந்த மக்கள் முனை, சுப்பர்மடம், தும்பளை பகுதிகளில் தங்கி வாழ்கின்றனர்.

எனவே இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று குடியமர அனுமதிக்கப்படவேண்டும்;

இல்லையேல்பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக கடல் தொழில் சமூகத்தினர் ஒன்றிணைந்து மறியல் போராட்டம் நடத்துவர் என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அக்கடிதத்தின் பிரதிகளை மீன்பிடி நீரியல் துறை வளத்துறை அமைச்சர், புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர், யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு, யாழ்மாவட்ட அரசியல் துறை பிரிவு, பலாலி இராணுவ கட்டளை அதிகாரி, அரசாங்க அதிபர் ஆகியோரிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது; (க-23)

### வவுனியா மாவட்ட

## உபகுழுக் கூட்டம் இன்று

(கொழும்பு)

தாய்லாந்துபேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்டதற்கு அமைய, அமைக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பான உபகுழுவின் வவுனியா மாவட்டக் கூட்டம் இன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது இதேவேளையாழ் மாவட்டத்துக்கானகூட்டம்நேற்று முன்தினம் முகமாலை சூனியப்பிரதேசத்தில் சுமார் 8 மணித்தியாலங்கள் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான உபகுழுக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதியும்,

திருகோணமலை மாவட்டக் கூட்டம் 21ஆம் திகதியும் அம்பாறை மாவட்டக் கூட்டம் 23ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (-8)

### ஸ்ரீஜெயவர்த்தன புர பல்கலைக்கழக

## மேலும் 19 பேர் விரைவில் கைதாவர்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தன புர படுகொலைச் சம்பவம் தொடர்பாக மேலும் 19 பேர் கைது செய்யப்படவுள்ளதாக மெடிக்கட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.என். பிறேமதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்படுகொலைச்சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்பட்டு 27 மாணவர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதுமேற் கொண்டவிசாரணையினை அடுத்தே 19 பேரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இவர்களை கைது செய்ய 4 விசேடபொலிஸ் குழுக்களை நியமித்துள்ளதாக பொலிஸ் அதிகாரி பிறேமதாச மேலும் தெரிவித்துள்ளார்; (க-10)

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி எச்சத்திற் கேமாப்பு உடைத்து

குறள்

# வலம்புரி

## ஏமாற்றினால்

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப்பேச்சு வார்த்தையை தொடர்ந்து, பாதுகாப்பு புனர்நிர்மாணம்தொடர்பான உபகுழுக்கள் அமைக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும், அரச பிரதிநிதிகளும் சந்தித்து ஆலோசனை நடத்தி சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக முடிவெடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது,

இதன் பிரகாரம், ஓமந்தையிலும் அதனைத் தொடர்ந்து முகமாலையிலும் பாதுகாப்பு உபகுழுவின் கூட்டம் நடைபெற்றுள்ளது, இருந்தபோதிலும், இக்கூட்டங்களில் எந்த விதமான முடிவுகளும் எட்டப்படவில்லை என்ற வேதனையான செய்தியே அறிவிக்கப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மீளக்குடியமர்வதற்கான முடிவுகள் அறிவிக்கப்படுமென மக்கள் எதிர்பார்த்திருந்த வேளையில் அதுபற்றி எந்த விதமான முடிவுகளும் எடுக்கப்படாமல் காலம் தாழ்த்துவது மக்களின் எதிர் பார்ப்புக்களை - ஆர்வத்தை மழுங்கடிப்பதாகவே அமையும்,

சமாதானப் பேச்சு வார்த்தைகள் தாய்லாந்தில் என்ற நிலைமை ஏதோ ஒருவகையில் உருமாறி முகமாலையில்நடக்குமளவிற்கு முன்னேறம கண்டுள்ளபோது உயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக்குடியமர்வதற்கு அனுமதி மறுப்பது தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை என்றே கூறவேண்டும்.

அரசும் -புலிகளும் சமாதானப் பேச்சு வார்த்தையை முன்னெடுத்துச் செல்லும்போது அதில தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் அபிலாசைகளை நிறைவேறக் கூடியதான விடயங்களும நடைமுறைப்படுத்தவேண்டும். இல்லையேல், சமாதானப் பேச்சு என்பது யுத்தம் நடத்திய இருதரப்பினருக்கும் மட்டும உரியது என்றமுடிவை மக்கள் எடுத்து விடுவார்கள். அதன் பின்னால சமாதானத்தின் மகிமையை - அதன் கனதியைப பேணும் ஆர்வமும்பொது மக்களிடம அறவே இல்லாது போய்விடும் இத்தகையதொரு சூழ்நிலையில் எப்படித்தான் சமாதானத்தை பெற்றெடுத்தாலும் அதில் எதுவித அக்கறையுமற்றவர்களாக மக்கள் இருப்பார்கள் .

# சிறு சாதனைகள் மூலம் பெறப்படும் ஊக்கம்

# பெரிய இலட்சியங்களுக்கு வழிகாட்டுகின்றது

'மனிதன் எங்கே போக விரும்புகிறானோ அங்கேதான் அவனது இருப்பிடம்' என்றார் வான் பிரான் என்ற ஜெர்மன் நாட்டு ராக்கெட் விஞ்ஞானி, வான் பிரான் ஜெர்மனியிலிருந்து அமெரிக்கா வந்தவர் பல ஆண்டுகளாக அமெரிக்க வான வெளித்திட்டத்தை நிர்வகித்தவர். முதல் மனிதனைச் சந்திரனுக்கு அனுப்பி வைக்கக் காரணமாயிருந்த விஞ்ஞானி அவர், சந்திர மண்டலத்தைச் சில நாள் மனித வீடாக மாற்றிய சாதனையை நிகழ்த்திய அந்த மனிதர் 'சந்திரமண்டலத்துக்குப் போக ஆசைப்பட்டால் போய் வரலாம்' என்று கூறுகிறார், வானவெளியைப் பற்றியும் ராக்கெட்டைப் பற்றியும் அறிந்து கொண்டதால் புதிய எண்ணங் கொண்டார். முடியும் என்று நம்பினார் மனிதனை அனுப்பி வைத்தார்.

### முடியும் என்பதை மனதினுள் விடுங்கள்

சொல்லப்போனால், நமது வாழ்வில் பலகாரியங்களை நாம முடியாது என்று சொல்லிவிட-நம்பிவிடத் தயாராக இருக்கிறோம், நமது காரண காரியம் காட்டும் தர்க்க வாதப் புலனறிவை வைத்துக் கொண்டு,நாம் விஷயங்களை எடைபோடுகிறோம், முடியாது என்று முன்பே முடிவு கட்டி விட்டால், போகிற பாதையின் முகப்பிலேயே நாம் கதவை இறுகச் சாத்தி விடுகிறோம் என்றுதான் அர்த்தம்.

அதற்குப் பதிலாக முடியும் என்ற எண்ணத்தை லேசாக மனத்தினுள் விடுங்கள் பார்க்கலாம் என்ற ஒரு மன நிலையை ஏற்படுத்துங்கள், தொடர்ந்து முடியும் என்று சிலநாள்கள் எண்ணும் போது தானே வழி பிறக்கும். நமது 'முடியாது' என்ற எண்ணங்களாலேயே நம்வளர்ச்சியை நாம் தடைப்படுத்திக் கொள்கிறோம், சந்திரமண்டலத்திற்குப் போவது கூடச் சாதனையாய் மாறியிருக்கும் போது ஏன் நமது இலட்சியங்கள் சாதனையாகச் சிறக்க முடியாது? குறிக்கோள் அல்லது இலட்சியம் என்பது நம் மனத்தில் ஒரு சங்கிலித் தொடரான எண்ணங்களை ஏற்படுத்துகிறது. மனத்தில் ஆக்க சக்திகளை வெளியே வரச்செய்து அவற்றிற்கு வேலை கொடுக்கிறது. இலட்சியம் மனத்திலே வலுப் பெறப் பெற, மனத்தின் ஆக்க சக்தி செயலாக மாறுகிறது.

### ஆசைக்கு வலுவில்லை

செய்யவிரும்புவதை வாழ்க்கையில் நாம் சாதிக்க முயல வேண்டும். ஆனால் நம்மில் எல்லோரும் ஆசைப்படுகின்றோம். அவ்வளவுதான், ஆசை என்பது பாறை மீது ஓடும் தண்ணீர் போல. தண்ணீர் உள்ளே இறங்குவதில்லை. ஆசை என்பது மேலெழுந்தவாரியான நினைப்பு. அதற்கு வலுவில்லை. காரணம் ஆசைப் படுபவனுக்கே அது நடக்காது என்று தெரியும். அடிமனதில் அது நடக்காது என்று எண்ணம் ஓடும்போது, எப்படி ஆசை பலன் தரும்? நமது ஊரில் சினிமா உலகின் மீதும், சினிமா நடிகைகள் மீதும் ஆசைகள் கொண்டிருக்கும் இளைஞர் கூட்டம் தான் கண்முன் வருகிறது. 'ஆசைகள் குதிரைகளானால், பிச்சைக்காரர்கள் கூடச் சவாரி செய்வார்கள்' என்று ஓர் உருதுப் பழமொழி கூறுகிறது. வெறும் ஆசையினால் காரியம் நிறைவேறும் அற்புதம் நிகழத்துவங்கினால், சோம்பேறிப் பிச்சைக்காரர்கள் கூட ஆனந்தமாக குதிரையில் போவார்கள் என்கிறது பழமொழி. ஆசையை எண்ணிச் சப்புக்கொட்டும் ஆத்மாக்கள் இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

### இலட்சியம்

ஆசைகளில் நியாயம் இருக்கும் போது, நமது ஆசைகள் பிறர் உரிமைகளைப் பாதிக்காத போது, ஆசைகளில் நமக்கு உண்மையான ஈடுபாடு நிரந்தரமாகத் துவங்கும் போது, ஆசைகள் நமது மனத்தில் திடமாக வலுப் பெறும்போது, அவை இலட்சியமாகின்றன. இதுவரை நாம் எங்கிருந்தோம், எப்படி இருந்தோம் என்பதைப் பொறுத்ததல்ல இலட்சியம். நீங்கள் எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். (இந்நாள் வரை) எதிர்காலத்தில் எங்கே போக விருப்புகிறோம் என்பதை பொறுத்தே இலட்சியம். இலட்சியம் தீர்மானிக்கப் பட்டுவிட்டால், நாளடைவில் பாதை அமையும். பாதையில் நடக்கத் துவங்கும்போது இலட்சியம் தீபமாய், ஒளியாய் வழிகாட்டும்.

மனம் ஒருசிறு குழந்தை போல, அதைநாம் எப்படி வேண்டுமானாலும் வளர்க்கலாம்குழந்தைக்கு நாம்உற்சாகம்ஊட்டி வளர்ப்பதுபோல நம் மனத்திற்கு நாம்அடிக்கடி உற்சாகம் ஊட்டவேண்டும். ஊக்கம் தரவேண்டும். மனிதன் ஆரம்பநிலைகளில் மிகப்பெரிய இலட்சியங்களை- சாதிக்கமுடியாத ஆசைகளை- மனதில் கொள்ளக்கூடாது. ஏனெனில் பெரிய சாதனைகளைச் சாதிக்கமுடியாத போது ஏமாற்றம் ஏற்படுகிறது. இந்தக்காரியத்தில்நான் இந்தமுறை தவறிவிட்டேன் என்று சொல்வதற்குப் பதில் நான் எடுக்கும் காரியம் எப்போதுமே நடப்பதில்லை,என் அதிர்ஷ்டம் அப்படி.. நான் ஒரு தோல்வியானன், தோல்வியை அனுபவிக்கப் பிறந்தவன் என்று புலம்புகிறான்.

**டாக்டர்**

**எம். எஸ். உதயமூர்த்தி**

### தோல்வியை எண்ணக்கூடாது

நாம் ஒரிருதடவை தோற்றுவிட்டால், அதற்காக நாமே ஒரு தோல்வி' என்று எண்ணக்கூடாது. மாறாக நம் இலட்சியத்திற்கு-இலட்சியப் பாதைக்கு நாம் ஒளிகாட்ட வேண்டும்: அடுத்தமுறை வெற்றிபெறுவேன் என்று நம்பிக்கை தரவேண்டும்:

'எளிதாகச் சாதிக்கக்கூடிய சிறிய காரியங்களைக் கொடுத்து, குழந்தைகளுக்கும் பள்ளியில் உற்சாகமூட்டுங்கள் என்று கூறுகிறார்கள் மன நூலார். இப்படிப்பல சிறிய சாதனைகள் மனத்தில் ஒரு பழக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன. ஒருவெற்றிமன நிலையை அவை அமைத்து விடுகின்றன இந்த அனுபவம் பின்னால் பெரிய இலட்சியங்களுக்கு வழிகாட்டுகின்றது.

குழந்தைகளை வளர்க்கும் போது நமக்கு வீட்டிலும், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும்போது ஆசிரியர்களுக்கும் பள்ளிக்கூடத்திலும எத்தனைபெரிய பொறுப்பு இருக்கிறது என்பதை எண்ணிப்பாருங்கள்; ஏ! மக்கு! நீ உருப்படமாட், டாய்' என்று கோபப்படும் ஆசிரியர், மாணவரின் எதிர்காலத்திற்கு எத்தனைகேடு புரிகிறார் என்பதைச் சற்றுக் கவனமாகச் சிந்தித்துப்பாருங்கள்.

'என் மகளுக்கு ஒருகாரியம் உருப்படியாகச் செய்யத்தெரியாது' என்று திட்டும் தாய் அல்லது தந்தை குழந்தையின் மனத்தில் எத்தகையதோர் எண்ண அமைப்பை உருவாக்குகிறார் என்பதை யோசித்துப் பாருங்கள். குழந்தை விழுந்து விழுந்து தான் எழுந்து நடக்க கற்றுக்கொள்கிறது. குழந்தை விழும் போது நாம் தூக்கி விடுகிறோம். அல்லது நடை வண்டியை உதவிக்குக் கொடுக்கிறோம். ஏனெனில், நடக்கப் போகிறது. அதற்குநாம் உதவ வேண்டும். என்று நமக்குத் தெரியும். மாறாக, குழந்தை தனது தீர்மானங்களில் தவறு செய்யும் போது, சிரித்துக் கொட்டுகிறோம். போனால் போகிறது, அடுத்த முறை இப்படிச் செய்'' என்று நாமல்லவா ஊக்கமூட்ட வேண்டும்? உடல் அளவில் அது வளர உதவும் நாம், மன அளவில் அது வளர உதவுவதில்லை.

### இலட்சிய தீபம்

நான்கு முறை கணக்கைத் தவறாகப் போட்டவுடன், உனக்குக் கணக்குச் சுட்டுப் போட்டாலும் வராது, என்று ஆசிரியர் சொல்கிறார். மாணவன் நம்புகிறார். கிராமத்திலிருந்து நாட்டியம் கற்றுக் கொள்ள வந்த சிறுமியைப் பார்த்து, ''ஏன் உனக்கு நாட்டியம்? சாணியை மிதித்துக் கொண்டிருக்க வேண்டிய கால்கள், உன் கால்கள்'' என்று புத்திமதி கூறிய நாட்டியாலயத் தலைவியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இளம் உள்ளங்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்த வேண்டும். மாறாக அவர்களைக் கேவலமாகச் சிறுமைப் படுத்துவதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தையே நாம் நாசமாக்குகிறோம். எதிர் காலச் சமுதாயத்தையே பாழாக்குகிறோம். அதே போலத் தான் நம் மனமும் நம் சிறு சாதனைகளைப் பாராட்டுவதன் மூலம் நாம் வெகு தூரம் போகலாம். சிறு சாதனைகளில் ஏற்படும் வெற்றி, இலட்சிய தீபமாய் நமக்கு வழி காட்டும்.

## தினசரி தியானம்

## துணைவன்

பிரார்த்தனை, இறப்பென்னும் அச்சத்திலிருந்து தொண்டர்களை விடுவிக்கிறது. அதுஅவர்களை இறைவனுக்கு அருகில் கொண்டுவந்து, அவருடைய நிச்சயமானதும், அழிவற்றதும் பேரின்பமானதுமான இயல்பை உணரச் செய்கிறது. வெறும் பிரார்த்தனை பித்தளைப்பாத்திரத்தை அல்லது கைத்தாளத்தைக் கணீரென ஒலிக்கச் செய்தலைப் போன்றது. முழு மனதுடன் பிரார்த்தனை செய்வது தொண்டனுக்கு, வாழ்க்கையின் அடுத்தபடியைக் காட்டுகிறது. பிரார்த்தனை தான் களைத்துச் செல்லும் பாதையில் நம்பிக்கைக்குரிய துணைவன்.

சுவாமி சிவானந்தர்.

# வரவு-செலவு திட்ட மூலம் வீடமைப்பிற்கு அனுகூலம்

(கொழும்பு)

அண்மையில் ஐக்கிய தேசிய முன்னணியினரால் பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின் மூலம் வீடமைப்பு அபிவிருத்திக்கு பல தரப்பட்ட அனுகூலங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வீடமைப்பு அபிவிருத்தி கடன் வழங்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது,

இது பற்றி இக்கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் சி ஏ. சரத் சந்திர கருத்து வெளியிடுகையில்:

வீடமைப்பு அபிவிருத்தி விதிகளுக்கு அமைய கடன் வழங்கும் வசதிகளை கூட்டுத்தாபனம் விஸ்தரித்துள்ளது அத்துடன்செதல்லவீடமைப்பு கடன்வழங்கும் திட்டமும் மேலும் விரிவாக்கப்படும்.

இவ்வசதி 3 ஆயிரம் ரூபாவிற்கும் 15ஆயிரம் ரூபாவிற்கும் இடைப்பட்ட வருமானத்தைக் கொண்டவர்களுக்கு வழங்கப்படும் வீடமைப்பு கடன்வசதி 2லட்சம் ரூபாவில் இருந்து 5லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வட்டி வீதம் 10 5 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது

அத்துடன் காணி கொள்வனவு செய்வதற்கோ அல்லது வீட்டை வாங்குவதற்கோ இக்கடன் வசதியை பயன்படுத்த முடியும்.

இவ்வசதி குறைந்த அல்லது நடுத்தர வருமானம் பெறு

(8ம் பக்கம் பார்க்க)

# 117 புலிப் போராளிகள் நேற்று பயிற்சி முடித்து வெளியேறினர்

## அம்பாறையில் அணிவகுப்பு - தளபதிகள் ஏற்பு

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட பத்தாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்ற போராளிகளின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்றுக் காலை 7.10 மணிக்கு இடம்பெற்றது.

மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி த.ரமேஸ் ஈகைச் சுடரை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ஜனார்த்தனன், அம பாறை மாவட்டத் தாக்குதல் தளபதி திலக், மட்டு அம்பாறை புலனாய்வுத துறைப் பொறுப்பாளர் கீர்த்தி, மற்றும் தளபதிகள் சச்சி, நாகேஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இப் பயிற்சிப் பாசறையில் இருந்து கொமாண்டோ சிறப்புத் தாக்குதல் பயிற்சி பெற்ற 117 போராரிகள் நேற் றைய தினம் பயிற்சியை முடித்து வெளியேறினர்.

இப் போராளிகளின் அணி வகுப்பு மரியாதையைப் புலிகளின் தள பதிகளான ஜனார்த்தனன், திலக், கீர்த்தி, நாகேஸ் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

பயிற்சியை நிறைவு செய்த போராளிகள் நடத்திய இராணுவ சாகச விளையாட்டுக்கள், மயிர் கூச் செறியும் நிகழ்வாக அமைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-15)

## புறாபிடிக்கச் சென்ற மாணவன் அயல் வீட்டு நபர் தாக்கியதில் மரணம்

### மந்திகையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புறாபிடிப்பதற்காகச் சென்ற மாண வன் ஒருவனை, பக்கத்து வீட்டு நபர் ஒருவர் தாக்கியதில் படுகாயம டைந்து அம்மாணவன் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர் நேற்று அங்கு மரண மானார்.

சம்பவத்தில் மந்திகையைச் சேர்ந்த இராசநாயகம் இராசகுமார் (இராச குமார் (வயது 16) என்பவரே மரணமானவர்.

அவ்வீட்டில் புறா பிடிப்பதற்கா கச் சென்ற பிரஸ்தாப மாணவனை நபர் ஒருவர் தாக்கியதில் படுகாய மடைந்த மாாணவன் பருத்தித் துறை ஆதாரவைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டான்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனாவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு, சிகிச்சை பயனளிக் காத நிலையில் நேற்று அங்கு மரணமாகியுள்ளார். (க-7)

## உல்லாசப் பயணிகள்

## இலங்கைக்குச் செல்லும் தடையை சீனா நீக்கியது

(கொழும்பு)

சீனப் பிரஜைகள் இலங்கைக்கு உல்லாசப்பயணம் மேற்டகொள்வ தற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பா டுகளை அந்நாட்டு அரசாங்கம் நீக் கியுள்ளது.

கடந்த 20வருட காலமாக இடம் பெற்று வந்த யுத்தத்திற்கு முடிவு கட்டும் வகையில், இலங்கை அர சாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்டுள்ள பரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச்சூழலை அடுத்தே, சீனா அரசாங்கம் தனது பிரஜைகள் இலங்கைக்கு உல்லாசப் பயணம் மெற்கொள்வதற்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளது.

சீனப் பிரஜைகள் இலங்கைக்கு உல்லாசப்பயணம் மேற்கொள்வது தொழடர்பான ஒப்ந்தம் ஒன்று சீனாவின்சங்காய் நகரில் கடந்த வெள்ளியன்று கைச்சாத்திடப்பட் டுள்ளது.

அதேவேளை வருடாந்தம் 10 மில்லியன் சீனப்பிரஜைகள் இலங் கைக்கு உல்லசப்பயணம் மேற் கொள்வரென எதிர்பார்க்கப்படுகின் றது. (த)

## உயர் தொழில் நுட்ப

## கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயா தொழிநுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு 2003ம் கல்வி ஆண்டிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

2001ம் ஆண்டு அல்லது அதற்கு முதல் கா.பொ.த உயர்தரத்தில பதிய பாடத்திட்டத்தில் தோற்றியவர் களிடமிருந்து உயர்தேசிய கணக்கி யல் டிப்ளோமா, உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, தேசியா வியாபார கல்வி டிப்ளோமா, வர்த்தகமும் நிதியியலுமான தேசிய டிப்ளோமா, தேசிய ஆங்கில டிப் ளோமா ஆகிய கற்கை நெறிக ளுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பங்களை கல்வி பயில விரும்பும் தொழில்நுட்ப நிறுவனத்தின் முகவரியையும், கற்கும் பாடநெறி களையும் தெளிவாக் குறிப்பிட்டு பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறு வனம், 98வாட்பிளேஸ், கொழும்பு-7 என்ற முகவரிக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்கப் பட்டுள்ளது. (ந-5)

## சமாதான யாகம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை ஸ்ரீகாயத்ரி காம கோடி பீடத்தில் நாளை பூரணை தின யாகம் நடைபெறவுள்ளது. குர பீடா திபதி ஸ்ரீராஜ்குமார் தலைமையில், நாட்டில் சாந்தியும் சமாதானமும் சுபீட் சமும் வேண்டி யாகமும் விசேடபூ ஜைகளும் நடைபெறவுள்ளன. (ந-5)

## புனர் நிமாண உப குழுக்கூட்டம் இன்று கிளிநொச்சியில்

### தமிழ்ச் செல்வன்–பேனாட் தலைமையில்

(கிளிநொச்சி)

வடக்குக்கிழக்கு மாகாணங்க ளில் மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர் நிர்மாணக் கட்டுமானப்பணிகள் தொடர்பாக தாய்லாந்துப் பேச்சு வார்த்தையின் போது அழைக்கப் பட்ட அரசு விடுதலைப்புலிகளின் பிரதி நிதிகளை உள்ளடக்கிய உப குழுவின் கூட்டம் இன்று காலை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ் உப குழுக்கூட்டத்தில் தமிழீழ விடு தலைப்புலிகளின் முக்கிய உறுப்பி னர் வே. பாலகுமாரன், தமிழிழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், தமிழர் புனர்வாழ்வுக்க ழக சர்வதேச இணைப்பாளர் ஜோசப் மகேஸ்வரன் ஆகியோரும்,

அரசாங்கத்தின் சார்பில், சமா தான செயலகப் பணிப்பாளர் பேர் னாட்குணத்திலக்கா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், புனர் வாழ்வு அகதிகள் வழவகார மீள்கு டியமர்த்துகையின் இணைப்பாளரு மான சரத்பதிஸிதீன், கிழக்கின் பிரதிநிதி எம்.கே.எம். ராபீக் கலந்து கொள்ளவுள்ளார்.

இம்மாதம் 25மன் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளுக்கான கூட்டத்திற்கு உதவியாக, இக்கூடடத் தின் முடிவுகள் அமையும் என் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## நெடுந்தீவில்.........

இதனால் அங்கு குறிகட்டுவான் நெடுந்தீவு படகுச் சேவை தடைப் பட்டுள்ளதுடன் கடைகள் சந்தை கள் பாடசாலைகள் மற்றும் வைத் தியசாலை என்பன இயங்கவில்லை.

இந்நிலையில் நெடுந்தீவுப்பகு தியில் ஏற்பட்டுள்ள நெருக்குவா ரத்தைஅ போக்கும் வகையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கடித்தில் கேட்கப்பட்டுள்ளது. (இ)

## மாபெரும் மக்கள்...

போக்குவரத்துக்கு அனுமதித்தல்

நாகர்கோயில் வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுதல்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்க ளை அகற்றி மக்களை இயல்பு வாழ்க்கையில் ஈடுபட அனுமதித்தல்

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இம் மக்கள் போராட் டம் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டா ளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-43)

## பாதுகாப்பு உப...

பொறுப்பாளர் அமுதா, முல்லைத்தீவு அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்.கேணல் செழியன், விடுதலைப்புலிகளின் சமாதான செயலணிச் செயலாளர் புலித்தேவன் அரசியல் துறையைச் சேர்ந்த தயா மாஸ்டர் ஆகியோரும்,

அரச தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாலளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட மற்றும் மன் னார், வவுனியா இராணு வத்தள பதிகளும் கலந்து கொள்ளவுள் ளனர். (ம)

## ஒஸ்லோமாநாட்......

இலங்கைக்கு உதவி வழங்கும் ஒஸ்லோ மாநாட்டில் இந்தியா பங் குபற்றாதென ஏற்கனவே அறிவிக் கப்பட்டிருந்தும் பின்னர் அம்முடிவு மாற்றப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்காவும் பிரிட்டனும் இந்த மாநாட்டில் பங்கு கொள்வது குறித்து ஏற்கனவே உறுதியளித்துள்ளன. கனடா யப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் ஒஸ்லோ மாநாட்டில் பங்கு கொள் ளவுள்ளனர். (ந-5)

## நெடுந்தீவுக்குச்.......

த்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி என்.மதனரா ஜன், அமைப்பின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ஜெகன், உதவி அமைப் பாளர் நிசாந்தன் ஆகியோர் நெடுந் தீவில் தங்கியிருந்து மக்களை சந் தித்துப் பேசும் முயற்சியில் ஈடுபட்ட தாக தெரியவருகிறது

## புலிகளின் தடையை..

பெறவுள்ளஉதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப்புலிகளும் கலந்து கொள்வது அவர்களின் சர் வதேசஅங்கீகார அந்தஸ்தை எடுத்துக் காட்டுவதாகவும் கருதி அமெரிக்காவும பிரித்தானியாவும் புலிகள் மீதான தடையை நீக்க உத்தேசித்துள்ளதாக தெரியவரு கிறது.

அத்துடன் ஒஸ்லோ மாநாட் டில் உலகின் மிக முக்கியமான பல நாடுகள் கலந்து கொள்ள இருப்பதும் அவற்றில் சில நாடுகள் விடுதலைப்புலிகளின செயற்பாட்டை தமது நாட்டில் தடை செய்தவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந் நாடுகள் இலங்கை அர சாங்கமே விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கிய இன்றைய நிலை யில் தமது நாட்டுத் தடை பற்றி ஆழ்ந்து ஆலோசிப் பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை புலிகள் கலந்து கொள்ளும் ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்க, பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளும் கலந்து கொள்ளவுள்ளன. (இ)

யுத்தி நிறுதக் கண்காணிப்புக் குழுவினர் அப்பகுதிக்கு நேற்றும் சென்றதாகவும் எனினும் எதுவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அப்பகுதி படகுசேவை பொதுச்சேவைகள், சந்தைகள், கடை கள், எதுவும் நேற்று செயற் படவில்லை. (இ-6-7-9)

## அதாவுல்லா........

விடுதலைப்புலிகள் செயற்பட்டு வருகின்றனர் என்று அமைச்சர் ஹக்கிம் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டியிருப்பது, முஸ்லிம் காங்கி ரஸ்சிற்குள்ள அரச வெறுப்புனர் வை வெளிக்காட்டியுள்ளதாகவே இராஜதந்திர வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

இது ஒருபுறமிருக்க அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அரசு மேற்கொள்ளவுள்ள கொத்மல நீர் மின் திட்டம் தொடர்பாகத் தனது கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வருவதுடன், மலையக மக்களுக் கும் தனியான நிர்வாகம் அல கொன்றை ஏற்படுத்தித்தருமாறு அரசை வற்புறுத் திவருவதும், ஐக்கிய தேசிய முன்ன ணி அரசுக்குப் பெருந் தலையிடி யைக் கொடுத்துள்ளதுடன் அமைச்சர் தொண்டமானின் ஆதரவு நீடிக்குமா? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

ஐக்கிய தேசிய் முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் இவ்விரு அமைச் சாகளும் தங்கள் கோரிக்கைகளில் விடாப்பிடியாக நிற்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவை யும் பெறும் நோக்கில் அரசின் சமா தான முயற்சியை அதிகளவு விமர் சிக்காமல் அதற்கு தனது பூரண ஆத ரவு உண்டென அடிக்கடி கூறிவரு வதும், அவரது மாற்று அரசு அமை க்கும் யோசனையை வலுப்ப டுத்தி யுள்ளதாக இராச தந்திரவட்டாரங் கள் மேலும் தெரிவித்துள்ள. (ம)


கணனி இயக்குநர்களுக்கான பதவி வெற்றிடம்

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கணனி இயக்குநர் கள் தேவை

தமிழ் ரைப்பிங் செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலாரும் விண் ணப்பிக்க முடியும். தகுதியானவர்கள் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை

விளம்பர இலக்கம்:- 100,
வலம்புரி,
15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரக்கு 20.11.2002ற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்

ராஜா யாழ்ப்பாணம்

அஜித் (இரு வேடங்களில்) மீனா, கிரண் நடித்த



வில்லன்

காட்சி நேரம்10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)
விசேட காட்சி: 9.30

துயாளன் வீடியோ அன் கொமினிகேசன்

(24 மணி நேர சேவை)

- தொலைபேசிச் சேவை குறைந்த கட்டணத்தில்
- பக்ஸ் வசதி
- லமினேசன் (கவரிடுதல்)
- தரமான போட்டேப் பிரதிகள்.
- புதிய, பழைய CD கொப்பிகள்

என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

- வீட்டிலிருந்தவாறே தொடர்பு கொள்வதற்கு ஒழுங் குகள் செய்து கொடுக்கப்படும்

துயாளன் கொமினிகேசன்
(மகளிர்கல்லூரி முன்பாக)
யாழ்வீதி,
மானிப்பாய்.

T.P:- 021-222 3476
021-222 3429
021-222 2061


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 18.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.